2018 ஜூலை 5] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 4—40

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு சாய் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2018) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(உ) தமிழ்நாடு கரும்பு (கொள்முதல் விலையை ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு, 2018

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு கரும்பு (கொள்முதல் விலையை ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2018), மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு கரும்பு (கொள்முதல் விலையை ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2018)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள், சொல்லுங்கள்.*

திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரெங்கராஜன் கமிட்டியினுடைய பரிந்துரையான வருவாய்ப் பகிர்வு விலை நிர்ணய முறையை, இந்த அரசு கரும்பின் கொள்முதல் விலையை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான சட்டமுன்வடிவாகக் கொண்டு வந்திருக்கிறது. அதில், சில ஐயப்பாடுகளை எங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கேட்க விரும்புகின்றேன். 2015–2016 ஆம் ஆண்டில், மத்திய அரசு அறிவித்த* FRP *ரூ.2,300/–ல், தமிழ்நாடு அரசினுடைய* SAP *ரூ.450/– வழங்கப்பட்டது. அதற்கு அடுத்த ஆண்டு 2016–2017–லும் வழங்கினீர்கள். 2017–2018 ஆம் ஆண்டில் மத்திய அரசு* FRP *ரூ.2,550/– என அறிவித்தது. ஆனால், இதுவரையில், இந்தத் தேதி வரையில் தமிழ்நாடு அரசு விலையை அறிவிக்கவில்லை. ஊக்கத் தொகையாக டன் ஒன்றிற்கு 200 ரூபாயை அறிவித்திருக்கிறீர்கள். அதுவும், பல ஆலைகளில் வழங்கப்படவில்லை. அதேபோல, போக்குவரத்துக் கட்டணம் டன் ஒன்றிற்கு 100 ரூபாய் என 2 ஆண்டுகள் வழங்கப்பட்டது. ஆனால், 2017–2018 ஆம் ஆண்டிற்கு இதுவரையிலும் அரசு அறிவிக்கவில்லை. தமிழ்நாடு முழுவதும் உள்ள எல்லா கரும்பு விவசாயிகளுக்கும் அரசு தர வேண்டிய பணம், கிட்டத்தட்ட 1,850 கோடி ரூபாய் பாக்கி இருக்கிறது. ரெங்கராஜன் கமிட்டியினுடைய பரிந்துரையின் நோக்கமே, கரும்பு விவசாயிகளுக்கு பாக்கி இல்லாமல் பணம் உடனடியாக வழங்கப்பட வேண்டும் என்பதுதான். அதனடிப்படையில், கரும்பு கட்டுப்பாட்டு வாரியம் என்று அமைத்து, அதில் 4 பேரை உறுப்பினர்களாக நியமித்திருக்கிறீர்கள். கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலிருந்து 2 விவசாயிகளையும், தனியார் சர்க்கரை ஆலைகளிலிருந்து 2 பேரையும் நியமித்திருக்கிறீர்கள். ஆனால்,*

@ 5–7–2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

அந்த வாரியத்திற்குப் பரிந்துரை செய்யும் தணிக்கைக் குழுவில் விவசாயிகள் இடம் பெறவில்லை. அந்தத் தணிக்கைக் குழுவின் வேலையே recommend செய்வதுதான். அக்குழுவினர்தான், வாரியத்திற்கு recommend செய்வார்கள். கரும்பின் கொள்முதல் விலையை இந்த அளவில் நிர்ணயம் செய்யுங்கள் என்று சொல்லும் இடத்தில் விவசாயிகள் இல்லை என்பது ஒரு குறைபாடு. அதில், விவசாயப் பிரதிநிதிகள் இடம் பெற வேண்டும். அதேபோல, வண்டிச் சத்தம், கரும்பினுடைய விலை ஆகியவற்றை நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை என்று நிர்ணயிக்கின்ற முறையை மாற்றி, 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை என நிர்ணயம் செய்ய வேண்டும். தற்போது விலைவாசி அதிகரித்து வருகின்றது; கூலி உயருகிறது. எனவே, கரும்பு விவசாயிகள் படுகின்ற துயரைப் போக்குகின்ற வகையில், நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நிர்ணயம் செய்வது என்பதை மாற்றி இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நிர்ணயம் என மாற்ற வேண்டும்.

அதேபோன்று, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்தில், விவசாயிகள், அரசு அதிகாரிகள், ஆலை அதிபர்கள் ஆகியோர் முத்தரப்புப் பேச்சுவார்த்தை நடத்தி விலையை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். அந்த முறை, கடந்த 6, 7 ஆண்டுகளாகப் பின்பற்றப்படவில்லை. அந்த முறையை இந்த அரசு தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும். அப்போதுதான், விவசாயிகளுடைய பிரச்சினை, ஆலை அதிபர்களுக்கு ஏற்படும் சிரமங்கள், அரசினுடைய நிலைப்பாடு ஆகியவற்றைச் சொல்ல முடியும். எனவே, முத்தரப்புப் பேச்சுவார்த்தை என்பது மிக, மிக அவசியமான ஒன்று. அதையும் இந்த அரசாங்கம் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்டமுன்வடிவு கரும்பு விவசாயிகளுக்குப் பயனுள்ளதுதான்; அதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், இதுபோன்ற சிற்சில பிரச்சினைகளைத் தீர்வு செய்து, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்ற வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருங்கள், இருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுடைய பெயரில் தீர்மானம் இருக்கிறது. முதலில், அவர் பேசட்டும், பிறகு நீங்கள் பேசுங்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

[2018 ஜூலை 5

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழியில் நடக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், கரும்பு விவசாயிகளுடைய நலனைக் கருதிதான், அவர்களுடைய எதிர்காலத்தைக் கருதிதான் இன்றைக்கு இந்தச் சட்டமுன்வடிவை இங்கே அறிமுகப்படுத்தச் சொல்லியிருக்கிறார்கள் என்பதை முதலில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, இந்தக் குழுவில் 2 விவசாயிகள் சேர்க்கப்பட்டுள்ளார்கள் மொத்தம் 4 உறுப்பினர்கள், அதில் 2 விவசாயப் பிரதிநிதிகள் இருக்கிறார்கள். (குறுக்கீடு) மொத்தம் 16 பேர், அவர்களில் 2 விவசாயப் பிரதிநிதிகள் இடம் பெற்றிருக்கிறார்கள். (குறுக்கீடு) அதைப் பற்றிச் சொல்கிறேன்.

பிற்பகல் 4–45

மேலும், கரும்புக்கு ஆண்டுதோறும் அகில இந்திய அளவில் மத்திய அரசு சட்டப்பூர்வ விலையான, நியாயமான மற்றும் ஆதாய விலையினை அறிவிக்கின்றது. தமிழ்நாடு உட்பட சில மாநிலங்கள் மத்திய அரசு அறிவிக்கும் விலைக்குமேல் மாநில அரசின் பரிந்துரை விலையினை அறிவித்திருந்தன. கடந்த பருவங்களில், பருவ மழை பொய்த்தல், உற்பத்திச் செலவு அதிகரிப்பு மற்றும் வேளாண்மைத் தொழிலாளர்களின் பற்றாக்குறை ஆகிய காரணங்களினால் கரும்பு சாகுபடி பரப்பு நமது மாநிலத்தில் குறைந்துள்ளது. மேலும், உலக மற்றும் அகில இந்திய சந்தைகளில் சர்க்கரை மற்றும் உப பொருட்கள் விற்பனை விலையில் வீழ்ச்சி ஏற்பட்டதால் உற்பத்திச் செலவுக்கும் விற்பனை விலைக்கும் இடையேயான வேறுபாடு அதிகரித்து சர்க்கரை ஆலைகள் பெரும் நட்டத்தினை அடைந்தன. அதனால் விவசாயிகளுக்குக் கரும்பு விலையினை காலத்தே வழங்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

சர்க்கரை ஆலைகளின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு, மத்திய அரசு கடந்த 2012 ஆம் ஆண்டு டாக்டர் சி. ரெங்கராஜன் அவர்கள் தலைமையில் அகில இந்திய அளவில் குழுவினை அமைத்தது. அக்குழு தனது பரிந்துரையில், வருவாய்ப் பகிர்மான அடிப்படையில் கரும்புக்கு விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டுமெனவும் மற்ற மாநிலங்கள் கரும்புக்கு பரிந்துரை விலையினை அறிவிக்கக்கூடாது எனவும் பரிந்துரைத்தது. மேலும், குழு வருவாய்ப் பகிர்மான

முறைப்படி, சர்க்கரையிலிருந்து கிடைக்கும் வருமானத்தை மட்டும் கணக்கில் எடுத்துக்கொண்டால், அதனை 75 சதவிகிதமும், சர்க்கரை மற்றும் பிரதான உப பொருட்களிலிருந்து அதாவது, கரும்பு, கரும்புச் சக்கை, கரும்பு கசண்டு மற்றும் ஆலைக் கழிவுகளிலிருந்து கிடைக்கும் ஒட்டுமொத்த வருமானத்தில் 70 சதவிகிதம் கரும்பு விலையாக நிர்ணயிக்க வேண்டுமெனவும் பரிந்துரைத்தது.

மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா மாநிலங்கள் மாநில அளவில் கடந்த 2014–2015 சர்க்கரைப் பருவம் முதல் வருவாய்ப் பகிர்மான அடிப்படையிலான கரும்பு விலை நிர்ணயக் குழுவின் பரிந்துரையினை அம்மாநிலங்களில் நடைமுறைப்படுத்தி வருகின்றன. நமது மாநிலத்தில் கரும்பு விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைத்திடவும், சர்க்கரை ஆலைகளின் இலாபத்தில் உரிய பங்கு பெறும் வகையிலும், கரும்பு விலை நிர்ணயம் செய்வது தொடர்பாக அரசுக்கு உரிய பரிந்துரை அளிக்க விவசாயிகள், சர்க்கரை ஆலைப் பிரதிநிதிகள் மற்றும் அரசு அதிகாரிகள் கொண்ட குழுவினை, அரசாணை எண் 79, வேளாண்மைத் துறை, நாள் 20–3–2017 மூலம் தமிழக அரசு அமைத்தது. அக்குழு அரசுக்கு தனது பரிந்துரையையும் அளித்தது. மேற்கண்ட குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தமிழக அரசு 2018–2019 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகள் எதிர்கொண்டு வரும் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணும் பொருட்டு, கரும்பு விவசாயிகளுக்கு விலை காலத்தே வழங்குவதை உறுதி செய்யும் நோக்குடன் நடப்பு 2017–2018 ஆம் ஆண்டு அரைவைப் பருவம் முதல் வருவாய் பகிர்மானம் அடிப்படையிலான கரும்பு விலை நிர்ணய முறையினை நடைமுறைப்படுத்த அறிவித்துள்ளது. இவ்விலைக் கொள்கையின்கீழ் விவசாயிகள் மத்திய அரசு அறிவிக்கும் நியாயமான மற்றும் ஆதாய விலையைப் பெறுவதை உறுதி செய்வதுடன், கூடுதலாக சர்க்கரை ஆலைகளின் இலாபத்தில் ஒரு பகிர்வு விவசாயிகளுக்குக் கிடைக்க வாய்ப்புள்ளது. மேலும், விலைக் கொள்கை மாற்றத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாகவும் மற்றும் விவசாயிகள் கடந்த பருவத்தில் பெற்ற விலையினை அதாவது ரூ.2,750/–ஐ நடப்புப் பருவத்தில் பெறும் வகையிலும், புதிய வருவாய்ப் பகிர்மான அடிப்படையில் பெறப்படும் விலைக்கும் தற்போது பெற்று வரும் ரூ.2,750–க்கும் இடையேயான வித்தியாசத்தை கரும்பு உற்பத்திக்கான ஊக்கத் தொகையாக கரும்பு விவசாயிகளுக்கு நேரடியாக வழங்கவும் இன்றைக்கு தமிழக விவசாயிகளுடைய காவலனாக

[திரு. இரா. துரைக்கண்ணு] [2018 ஜூலை 5

இருக்கின்ற தமிழக அரசு அறிவித்துள்ளது என்பதை இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். இதன்படி நடப்பு நிதியாண்டில் ரூ.200 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, டன் ஒன்றுக்கு ரூ.200 வீதம் கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, வருவாய்ப் பகிர்மான அடிப்படையிலான கரும்பு விலை நிர்ணயம் செய்தல் தொடர்பான சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தற்போது அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்கு ஓர் ஐயப்பாடு இருக்கிறது. இந்த வருடம் மத்திய அரசு, சட்டப்பூர்வமான, நியாயமான மற்றும் ஆதாய விலையான FRP-ஐ 2,550 ரூபாய் என அறிவித்திருக்கிறது. அதன்பிறகு SAP, மாநில அரசினுடைய பரிந்துரை விலை அறிவிக்கப்படவில்லை என்ற ஓர் ஐயப்பாடு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்கு இருக்கிறது. அதற்காகத்தான் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 200 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்திருக்கிறார்கள். கரும்பு விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு ரூ.200/– போய்ச் சேர்ந்துவிடும். அதுவல்லாமல் transport cost-ஐ அந்தத் தொழிற்சாலைகள் வழங்கிவிடும். அதனால் ரூ.2,850/-ஐ வழங்குவதற்கான ஒரு நிலையான உறுதிப்பாட்டை மாண்புமிகு முதமைச்சர் அவர்கள் ஏற்படுத்தியுள்ளார்கள் என்பதை நான் குறிப்பிட கடமைப்பட்டுள்ளேன்.

பிற்பகல் 4—50

மேலும், 2013—2014 முதல் 2016—2017 வரை நான்கு வருடங்களாக மிகப் பெரிய வறட்சி ஏற்பட்டது. பருவமழை பொய்த்துப் போனது. அதுமட்டுமல்லாமல், சர்க்கரை உற்பத்திச் செலவிற்கும் சர்க்கரை விற்பனை விலைக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. சர்க்கரை குவிண்டால் ஒன்று 28 ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்படுகிறது என்றால், அதற்கு ரூ.41,000/– உற்பத்திச் செலவாகிறது. நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில் சர்க்கரைக் கட்டுமானமும் மிகக் குறைவு. வெட்டுக்கூலி அதிகம். ஆள் பற்றாக்குறையும் உள்ளது.

2018 ஜூலை 5] [திரு. எம்.சி. சம்பத்]

இதுபோன்ற சூழ்நிலையில் கடந்த நான்கு ஆண்டு காலமாக கூட்டுறவுச் சர்க்கரை ஆலையிடம் அரசு வழிவகைக் கடன் வாங்குகிறது; கொடுத்துவிடுகிறது. தனியார் சர்க்கரை ஆலைகளில் கொடுக்காததற்கு இதுதான் மிகப் பெரிய காரணம். EID parry என்கின்ற ஓர் ஆலை விவசாயிகளை திருப்தி செய்திருக்கிறார்கள். மற்ற தனியார் ஆலைகள் கொடுக்கவில்லை. அதற்காக மாநில அரசும், விவசாயிகளை முழுமையாகத் திருப்தி செய்ய வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்துகின்றது. SAP, மாநில அரசினுடைய பரிந்துரை விலையை நிச்சயமாக நீங்கள் கொடுக்க வேண்டுமென்று மீண்டும் மீண்டும் வலியுறுத்தியிருக்கின்றோம். அது இறுதி செய்யப்பட்ட முடிவு அல்ல. ஏற்கெனவே 2014–2015–ல் கர்நாடகாவும், மகாராஷ்டிராவும் SAP–மாநில அரசினுடைய பரிந்துரை விலையைக் கொடுக்கவில்லை. அவர்கள் Rangarajan Committee–ஐ follow செய்து revenue sharing formula–ல் போய்விட்டார்கள். வருவாய்ப் பகிர்மான அடிப்படையில் அவர்கள் பிரித்துக் கொடுக்கிறார்கள். கர்நாடகாவைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட அங்கு கட்டுமானம் 11.5 சதவிகிதம், 12 சதவிகிதம். மகாராஷ்டிராவில் 12 சதவிகிதம் கட்டுமானம் வருகிறது. இங்கு 7 சதவிகிதம், 8 சதவிகிதம், 9 சதவிகிதம்தான் கட்டுமானம் வருகிறது. நமக்கு, ஓர் ஆலைக்கு, 2 இலட்சம், 3 இலட்சம் டன் கரும்பு அரைவைக்கு வேண்டுமென்றால், அந்த அளவிற்கு விவசாயிகளால் உற்பத்தி செய்ய இயலவில்லை. 40 ஆயிரம் டன், 50 ஆயிரம் டன், ஒரு இலட்சம் டன் என்ற அளவிற்குத்தான் கரும்பினை உற்பத்தி செய்கிறார்கள். அதை எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. மேலும், இந்த அரசில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நடவடிக்கையின் காரணமாக 200 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, நேற்றைய தினம்தான் 134.50 கோடி ரூபாயை நாங்கள் கொடுத்துவிட்டோம். இது விவசாயிகளுடைய account–க்கு direct ஆக சேர்கிறது. தனியார் ஆலைகளுக்கோ, மற்ற ஆலைகளுக்கோ அனுப்பவில்லை. தனியார் ஆலைகளுக்கும், மற்ற ஆலைகளுக்கும் அனுப்பினோம் என்றால் அவர்கள் நிதியை rotation செய்து விடுவார்கள். அந்தச் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு தலைசிறந்த முடிவை எடுத்திருக்கின்றார்கள். கரும்பு விவசாயிகளுக்கு ரூ.2,850/–ஐ தொடர்ந்து கொடுக்க வேண்டுமென்ற உறுதிப்பாட்டை எடுத்து, (மேசையைத் தட்டும் ஒலி) கரும்பு விவசாயிகளின் வயிற்றில் பால் வார்த்த அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதைக் குறிப்பிட்டு, இந்தச் சட்டமுன்வடிவை

[திரு. எம்.சி. சம்பத்]

நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டு, அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 24 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 24 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

2018 ஜூலை 5]

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு கரும்பு (கொள்முதல் விலையை ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2018) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஊ) தமிழ்நாடு நிலச் சீர்திருத்தம் (நில உச்ச வரம்பு நிர்ணயம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2018

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தம் (நில உச்ச வரம்பு நிர்ணயம்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/2018), மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தம் (நில உச்ச வரம்பு நிர்ணயம்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/2018) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 5–7–2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.